ஆளுநர் மாளிகையில், நேற்று முன்தினம் (28.4.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மனோ தங்கராஜ் அவர்களுக்கு மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளார்.

ஆளுநர் மாளிகையில், நேற்று முன்தினம் (28.4.2025) தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மனோ தங்கராஜ் அவர்களுக்கு மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.4.2025) தலைமைச் செயலகத்தில், 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான உள்துறை மானியக் கோரிக்கையையொட்டி உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் வி.சிவப்பிரியா மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், Fairfax Financial holdings நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பிரேம் வாட்சா அவர்கள் சந்தித்து பேசினார். உடன் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், பெங்களூர் சர்வதேச விமான நிலையம் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஹரி மறார் மற்றும் ஜெரார்ட் மின்டோ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தன்னாட்சி தமிழகம் தலைவர் ஆதி செந்தில்நாதன், அமெரிக்க தமிழ் இருக்கை தலைவர் விஜய் ஜானகிராமன், அமெரிக்கா–புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழ் மன்றத்தின் தலைவர் துரை கண்ணன், மும்பை–இலெமூரியா அறக்கட்டளையின் தலைவர் ச.குமணராசன், கருநாடகத் தமிழ் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் முத்துமணி நன்னன், தமிழியக்கம் பொதுச் செயலாளர் கவியருவி அப்துல்காதர் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, அவர்கள் நடத்தும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டின் உரிமையை உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி, வெற்றி பெற்ற முதலமைச்சர் அவர்களுக்கு வருகிற 03.05.2025 அன்று சென்னையில் பாராட்டு விழா நடைபெறுவதையொட்டி, நேற்று முன்தினம் (28.4.2025) சென்னை, பெரியார் திடலில் அவ்விழாவிற்கான அழைப்பிதழினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களிடம் வழங்கினார்.